தாமிரபரணி அஷ்டோத்தர பாமாலை

குருவே துணை

ஓம்
ஆதி பராசக்தி உருவே போற்றி
ஆதிமுனி அகத்தியர் அருளே போற்றி
தரும நெறியின் கருவே போற்றி
அறுகுண பகவதி குருவே போற்றி
செந்நிற மலரான தளிரே போற்றி
விண்ணகர மலையின் நதியே போற்றி
தன்னிகரில்லா பரம்பொருளே போற்றி
மண்ணிலே அமுதமான மணிமுத்தாறே போற்றி
பொன்னிற பொலிவான புத்துயிரே போற்றி
அன்னோர் வினை அகற்றுபவளே போற்றி (10)

முக்தியை அளிக்கும் முதன்மையே போற்றி
ருத்ரனின் கலையான தாண்டவமே போற்றி
கலியுக மாசுகளை கலைப்பவளே போற்றி
அலைமகள் அவனியில் அவளே போற்றி
தாங்கும் பிரம்மத்தின் மூலமே போற்றி
ஓங்கார நாதத்தின் ஒலியே போற்றி
மலையரசன் மகளான மரகதமே போற்றி
விலையில்லா மங்கள வாசியே போற்றி
மருவில்லா மகத்தான மங்கையே போற்றி
உருவான அம்பாசமுத்திர அழகே போற்றி (20)

அன்னையாய் அருளும் அழகுமணியே போற்றி
என்றும் மகத்தான மகாநதியே போற்றி
தேவகுண திவ்யமான தீர்த்தமே போற்றி
ஆவ வென்றருளும் அழுக்கில்லா ஆறே
ஆனந்த பிரம்மத்தின் ஆரவார உருவே
ஆனனம் முக்குண அதிசய சக்தியே
பாதங்கள் மூன்றாக பல்வேறு கிளையே
வாதங்களுக்கு அப்பாற்பட்ட மாயையே
எடுக்கும் பிறவியின் புண்ணியமே போற்றி
விடுபட வைக்கும் வேகநதியே போற்றி (30)

ஒலியை உருவாக்கும் ஓங்கார உமையே
கலியில் காக்கும் கௌரி நாயகியே
பொதிகையில் தோன்றிய புனிதமான நதியே
மதியை மயக்கும் மகத்தான கங்கையே
சிவனும் சூடிய சிங்கார மலரே
அவனியில் ஓடும் அழகான திருமகளே
பிரம்மனின் இதயத்து கமலமே போற்றி
வரமாய் வந்த வற்றாத சீவநதியே
எங்கும் பரவிய ஏகாந்த ஒளியே
தங்கு தடையில்லா தாமிரபரணியே

துணையாறு கொண்ட தொய்வில்லா தீர்த்தமே
இணையில்லா சத்திய சித்தான ஆனந்தமே
வினைகளை அறுக்கும் வெற்றியின்  சின்னமே
சுனையாய் அறிவைப் பொழியும் ஒளியே
அழிவில்லா ஆனந்த அகண்ட பொலிவே
செழிப்பான செங்கமல சிற்றாறு அருவியே
கவரும் கலையான குற்றால சாரலே
தவமாய் மோட்சம் தந்திடும் நினைவே
தலையான நதியாய் தவழும் அழகே
கலையான விஷ்ணுவின் காலடியே போற்றி

திருக்கல்யாண வடிவான திருநெல்வேலி தீர்த்தமே
திருமூர்த்திகள் மூவரும் பூஜிக்கும் தீர்த்தமே
சரித்திரம் படைக்கும் சாம்பவி தாயே
தரித்திரம் களையும் தாரணி பக்தியே
பரதனின் தேசத்தில் பரந்து விரிந்தவளே
வரங்களை அளிக்கும் வசீகர வளமே
உருவாகும் உலகாய் உலவும் இயற்கையே
அருவாய் அமைந்த அவ்யக்த உண்மையே
குணங்களுக்கு அப்பாற்பட்ட குலமாதா கோமதியே
குணங்கள் பலவாய் உருவெடுக்கும் மாயையே

கண்ணுக்குத் தெரியாத கடவுளாய் ஆனவளே
கண்ணறியும் புவனமாய் காட்சி அளிப்பவளே
எங்கும் நிறைந்த இறையாய் இருப்பவளே
பொங்கும் மங்களமாய் பூமியில் விரிந்தவளே

எல்லா தேவர்களும் வணங்கும் தீர்த்தமே
எல்லா வேதங்களும் விரும்பும் தீர்த்தமே
மந்திர வடிவான மகாலக்ஷ்மி தீர்த்தமே
இந்திரியம் அடக்கும் இலக்கான தீர்த்தமே
பக்தருக்கு முக்தியளிக்கும் பவித்தர தீர்த்தமே
சக்தியாய் சம்சாரக் கடலின் துடுப்பே (70)

அத்ரி முனிவர் அடிபணிந்த ஆனந்தமே
புத்தியுடன் ஹயக்ரீவர் புரிந்த ஆராதனையே
அமுதமாய் பொழியும் ஆனந்த மழையே
சுமுகமாய் உலகம் சுகிக்க அருள்பவளே
அலங்கார மாலையாய் அணியப்பட்ட அழகே
அலையும் மனதின் ஆழமான உணர்வே
முக்கூடல் தலமான மும்மலை அழகே
எக்காலமும் இருக்கும் சிவபக்தி உருவமே
பெருகிடும் விஷ்ணுபக்தி பெருவெள்ள வடிவே
உருவாக்கும் பிரம்மனின் உள்ளத் தாமரையே (80)

அன்னத்தை அளிக்கும் அன்னை நதியே
பொன்னை விளைய வைக்கும் பூமாதேவியே
சித்திரமாய் உலகை சிந்திக்க வைப்பவளே
பத்திரமாய் அருளும் கடனாநதி கருணையே
திருபுரத்து திருதேவி முப்பிடத்தி அம்மனே
உருவாக்கும் பிரம்மனின் உணர்வான உண்மையே
நெல்லையப்பர் கோயிலின் நேர்த்தியான காந்திமதியே
எல்லாவற்றிற்கும் சாட்சியான சங்கரன் கோவிலே
திருப்புடை மருதூரின் திருவிழா கோமதியே
திருவருளால் பாபங்களை நாசம் செய்பவளே (90)

ஜோதி வடிவமான சேர்வலாறு சிற்றாறே
ஆதிமூலமான பொதிகையில் பூத்த பொருநையே
அம்மநாத கோவிலில் அருளும் அம்மையே
உம்பரான கஜேந்திரனுக்கு மோட்சம் அளித்தவளே
தென்னாட்டு கங்கையாய் தெளிவை அளிப்பவளே
இந்நாட்டு ஜடாயுவிற்கு ஏற்றம் தந்தவளே
சக்கரமாய் வந்து சங்கடங்கள் தீர்ப்பவளே
அக்ரமம் தடுக்க அவதாரம் எடுப்பவளே

பாண்டிய மண்ணின் பாங்கான பாவையே
வேண்டியதருளி வளைகுடாவில் இணைபவளே (100)

அனைத்து நோயும் அழித்துக் காப்பவளே
அனைத்து துயரமும் அறவே ஒழிப்பவளே
சங்கர நாராயணனின் கருணை பெருவெள்ளமே
சங்கடம் தீர்க்கும் செந்நிற பிரபையே
புண்ணியம் பலவற்றை பெருக்கும் பொருநையே
புண்ணிய வியாசரின் மாஹாத்ம தாமிரபரணியே
தேவகுருவின் தெய்வீக அருள்மிகுந்த தாமிரபரணியே
பாவங்கள் போக்கும் தாமிரபரணி தாயே போற்றி போற்றி ! (108)

வேறு
தயை புரியும் தயானந்த குருவே
உயர்மிகு குருவாய் ஓங்கார ஆனந்தமே
அயராது காக்கும் அண்டத்து தருமமே
வியக்கும் மானுடத்தின் வித்தான செந்தமிழே
உரமாய் என்னுள் முழங்கிடும் சங்கே
தரமாய் அருளும் தரணியின் சுந்தரியே
வரத்திருமகள் பாமாலை வணங்கியே சூட்டுவேன்
இரந்துநான் கேட்க ஏற்பாய் அன்னையே
மகாலக்ஷ்மி